StudentBounty.com

B

3052

Register Number

**Part III**

# விலங்கியல் / ZOOLOGY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பகுதி - I

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்.

iii) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக.

30 × 1 = 30

1. பரிணாமத்தை நடத்துவிக்கும் காரணிகள் எனப்படுபவை

அ) வெப்பநிலை ஆ) மிதமிஞ்சிய இனப்பெருக்கம்

இ) திடீர் மாற்றம் ஈ) சொமட்டோபிளாசம்.

2. நியோ-டார்வினிசக் கொள்கையை ஆதரித்தவர்

அ) வாலஸ் ஆ) F. B. சம்னர்

இ) மெக் டூகல் ஈ) ஹக்சிலி.

3. வளர்ப்பு மீன்களில் குருடாதல் மற்றும் இரத்தக் கசிவுகள் அறிகுறியாக உள்ள நோய்

அ) நீலச்சீழ் நோய் ஆ) நீர்க்கோவை நோய்

இ) செவுள் சிதைவு நோய் ஈ) சாப்ரோலெக்னியாசிஸ்.

4. முத்துச் சிப்பி வளர்ப்பதற்கு உகந்த நீரின் உப்புத்தன்மை

அ) 30 % ஆ) 10 %

இ) 20 % ஈ) 40 %.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



5. 21-ம் நூற்றாண்டின் சிறந்த மருத்துவ உணவு என அழைக்கப்படுவது ?

அ) சிப்பிகள் ஆ) கடல்பாசி

இ) இறால் ஈ) மீன்கள்.

6. பட்டாணிக் கொண்டை இவ்வினக் கோழிகளின் முக்கிய பண்பாகும்

அ) பிளைமோத் ஆ) பிராமா

இ) லெக்ஹார்ன் ஈ) சூசெக்ஸ்.

7. ஈ.சி.ஜி.-யில் P அலையின் கால அளவு

அ) 0·1 வினாடி ஆ) 0·08 வினாடி

இ) 0·27 வினாடி ஈ) 0·01 வினாடி.

8. தேன் கூட்டிலிருந்து பெறப்படும் பொருட்களைக் கொண்டு நோயைக் குணப்படுத்தும் முறை

அ) பிஸியோதெராபி ஆ) கீமோதெராபி

இ) எபிதெராபி ( Apitherapy ) ஈ) எலும்பு மருத்துவம்.

9. உயர்ந்த ரக பட்டாகக் கருதப்படுவது எது ?

அ) எரி பட்டு ஆ) டசார் பட்டு

இ) முங்கா பட்டு ஈ) மல்பரி பட்டு.

10. கருவுற்ற முட்டைகளை தன் வாயில் வைத்து பாதுகாக்கும் மீன்

அ) முல்லட் ஆ) திலேப்பியா

இ) பாம்ஃப்ரட் ஈ) கட்லா கட்லா.

11. மனித குரோமோசோம் தொகுப்பு வரைபடத்தில் 'X' குரோமோசோம் எந்த தொகுதியில் அடங்கும் ?

அ) A-தொகுதி ஆ) B-தொகுதி

இ) C-தொகுதி ஈ) D-தொகுதி.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

12. நடமாடும் மரபுப் பொருட்களைப் ( டிரான்ஸ்போசான்கள் ) பற்றி அறிவித்தவர்

அ) வாட்சன் மற்றும் கிரிக்

ஆ) பார்பரா மக்ளின்டோக்

இ) ஆனந்த் சக்கரவர்த்தி

ஈ) பிரிக்ஸ் மற்றும் கிங்.

13. 'எரி தணல் கரி' என்பது எதனுடைய கிராபிக்ஸ் கணினி மாதிரி ?

அ) DNA

ஆ) கார்போஹைடிரேட்

இ) லிப்பிடுகள்

ஈ) புரதம்.

14. எது தாவர உயிரிய பல்வகைமையை ஏராளமாக கொண்டுள்ளது ?

அ) நீலகிரி

ஆ) மன்னார் வளைகுடா

இ) நாக்ரக்

ஈ) நிக்கோபார்.

15. கீழ்க்காணும் பசு இனங்களில் எதனுடைய பாலில் அதிகக் கரோட்டின் சத்து காணப்படுகிறது ?

அ) சிந்தி இனம்

ஆ) ஹரியானா இனம்

இ) கிர் இனம்

ஈ) ஜெர்சி இனம்.

16. விந்தணுக்கள் சேமிக்கப்படும் இடம்

அ) விந்தகம்

ஆ) புரோஸ்டேட் சுரப்பி

இ) எபிடைடிமிஸ்

ஈ) செமினல் பை.

17. மிகச் சிறந்த உத்திரவாதம் அளிக்கும் வைரஸ் நோய்களை குணப்படுத்தும் வேதிச் சிகிச்சை மருந்து

அ) இன்டர்ஃபெரான்

ஆ) பென்சிலின்

இ) ஆமன்டிடின்

ஈ) ஸ்ட்ரெப்டோமைசின்.



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



18. செல்வழி நோய் தடைக்காப்பை செயல்படுத்துவன

அ) செல்நச்சாக்க வகை T செல்கள்
ஆ) B-லிம்ஃபோசைட்டுகள்
இ) மாக்ரோஃபேஜ்கள்
ஈ) ஆன்டிஜென் வழங்கும் செல்கள்.

19. உருவமொத்த இரட்டையர்களுக்கிடையே செய்யப்படும் உறுப்பு மாற்றம்

அ) ஆட்டோகிராஃப்ட்
ஆ) ஐசோகிராஃப்ட்
இ) அல்லோகிராஃப்ட்
ஈ) செனோ கிராஃப்ட்.

20. கீழ்கண்டவற்றில் முதல்நிலை நிணநீர் உறுப்பு எது ?

அ) தைமஸ்
ஆ) மண்ணீரல்
இ) நிணநீர் முடிச்சுகள்
ஈ) கோழைப்படலம் சார்ந்த நிணநீரியத் திசுக்கள் ( MALT ).

21. பெரிய வெள்ளையணுக்கள் எவை ?

அ) மோனோசைட்டுகள்
ஆ) லிம்போசைட்டுகள்
இ) நியூட்ரோ ஃபில்கள்
ஈ) பேசோ ஃபில்கள்.

22. நரம்பு தசை சந்திப்பில் வெளிவிடப்படும் வேதிப் பொருள்

அ) கால்சியம் பாஸ்பேட்
ஆ) அசிடைல் கொலைன்
இ) கிளைக்கோ புரதம்
ஈ) பொட்டாசியம் குளோரைடு.

23. ஒரு தீவிர மூளைக் குறைபாடு ( Chronic Brain Syndrome ) எவ்வாறு அழைக்கப்படுகிறது ?

அ) மையாஸ்தீனியா கிரெவிஸ்
ஆ) அம்னீசியா
இ) அல்ஸீமியர் நோய்
ஈ) பக்கவாதம்.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

24. தாது கலந்த கார்டிகாய்டுகளில் முக்கியமானது

அ) அல்டோஸ்டீரோன்

ஆ) கார்டிஸோன்

இ) கேட்டிகோலமைன்

ஈ) அட்ரீனலின்.

25. சிறுநீர்ப்பையில் தோன்றும் கற்களை வெளியேற்ற உதவும் முறை எது ?

அ) பிளாஸ்மோஃபீரிசிஸ்

ஆ) என்டோஸ்கோபி

இ) டையாலிசிஸ்

ஈ) சிஸ்டோ ஸ்கோபி.

26. நோய்த் தடுப்பாற்றலை அளிப்பது எது ?

அ) வைட்டமின் *A*

ஆ) வைட்டமின் *K*

இ) வைட்டமின் *C*

ஈ) வைட்டமின் *D*.

27. பெரியவர்களின் இயல்பான உடல் எடைக் குறியீட்டின் அளவு

அ) 20 — 30

ஆ) 19 — 25

இ) 15 — 20

ஈ) 10 — 15.

28. சோடியம் யூரேட் படிகங்கள் படிவதால் ஏற்படுவது

அ) ருமேட்டிக் மூட்டுவலி

ஆ) ஆஸ்டியோ ஆர்த்ரிட்டிஸ்

இ) கௌட்

ஈ) ரிக்கட்ஸ்.

29. பித்தக் கற்கள் எவற்றால் ஆனவை ?

அ) சோடியம் யூரேட்

ஆ) கால்சியம் ஆக்ஸலேட்

இ) கிளைக்கோஜன்

ஈ) கொலஸ்ட்ரால்.

30. மூச்சு சிற்றறையில் ஆக்ஸிஜனின் பகுதி அழுத்தம் ($PO_2$)

அ) 100 மி.மீ. Hg

ஆ) 140 மி.மீ. Hg

இ) 40 மி.மீ. Hg

ஈ) 46 மி.மீ. Hg.

[ Turn over

B

StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



## பகுதி - II

*குறிப்பு :* i) எவையேனும் பதினைந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் *மூன்று* மதிப்பெண்கள். 15 × 3 = 45

31. "PUFA" என்பது யாது ? அதன் முக்கியத்துவம் யாது ?

32. உமிழ்நீரில் காணப்படும் என்சைம் எது ? அதன் பணி யாது ?

33. வரையறு :- பிசியோதெராபி.

34. 'அமைதியான இதயத் தசை நசிவுறல் நோய்' என்றால் என்ன ?

35. மரண விறைப்பு ( Rigor mortis ) என்றால் என்ன ?

36. கண் புரை என்பது யாது ? அதன் இருவகைகள் யாவை ?

37. வாசெக்டமி என்பது யாது ?

38. நாடா புழுவில் காணப்படும் மூன்று வகை புரோகிளாட்டிடுகள் யாவை ?

39. தீவிர ஒருங்கிணைந்த தடைகாப்பு குறைவு நோய் ( SCID ) என்பது யாது ?

40. சூப்பர் பக்குகள் ( Super bugs ) என்பவை யாவை ? அவற்றின் பயன் யாது ?

41. குளோனிங் முறையின் பயன் ஒன்றினை எழுதுக.

42. கார்பன் தனிமைப்படுத்துதல் என்றால் என்ன ?

43. ஆரோக்கியமான கால்நடையை எவ்வாறு கண்டறிவாய் ?

44. பொரித்தலுக்கு தேவையான முட்டைகளை எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் ?

45. ஆட்டோ அனலைசரின் மேன்மைகள் யாவை ?

46. 'கூட்டமாக செல்லுதல்' ( Swarming ) என்றால் என்ன ?

47. பட்டுப்பூச்சி வளர்ப்பின் ( Sericulture ) மூன்று நிலைகளைக் கூறுக.

48. ஹார்டி வீன்பெர்க் விதியைக் கூறுக.

49. ஹைப்போபிஸ்டேஷன் என்றால் என்ன ?

50. பௌசாட் என்பது யாது ?



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - III

குறிப்பு : i) எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி. **56** - . வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஐந்து மதிப்பெண்கள். 7 × 5 = 35

51. இரத்தம் உறைதல் நிகழ்ச்சியை விளக்குக.

52. நினைவாற்றல் என்றால் என்ன ? அதன் வகைகளை விவரி.

53. பாக்டீரிய மரபியலைப் பற்றி தொகுத்து எழுதுக.

54. உலக சுகாதார அமைப்பின் ( WHO)-படி வரையறுக்கப்பட்ட எய்ட்ஸ் நோயின் அறிகுறிகள் யாவை ?

55. இம்யுனோ குளோபுலின் அமைப்பை படம் வரைந்து விவரி.

56. உலகளாவிய வெப்ப உயர்வின் விளைவுகள் ஐந்தினை எழுதுக.

57. நன்னீர் பற்றாக்குறைக்கான காரணங்கள் எவையேனும் ஐந்தினை எழுதுக.

58. செயற்கை பேஸ் மேக்கர் பற்றி குறிப்பு வரைக.

59. பட்டு இழை உருவாதலை விவரி.

60. சிவல் ரைட் விளைவு பற்றி சிறு குறிப்பு எழுதுக.

61. ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பினைப் பற்றி விளக்குக.

62. அலங்கார மீன் வளர்ப்பு தொட்டியை எவ்வாறு அமைப்பாய் ?

[ Turn over



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - IV

குறிப்பு : i) எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் *பத்து* மதிப்பெண்கள். 4 × 10 = 40

63. சிறு குடலில் செரித்தலின் செயல்களை விளக்குக.

64. முன் பகுதி பிட்யூட்டரியின் ஹார்மோன்கள் பற்றி விவரி.

65. மாதவிடாய்ச் சுழற்சியினை பற்றி ஓர் கட்டுரை எழுதுக.

66. மனிதரில் காணப்படும் வைரஸ் நோய்கள் பற்றி குறிப்பு வரைக.

67. ஏதேனும் நான்கு மரபியல் நோய்களை விவரி.

68. இடர்பாடு தரும் கழிவுகளின் மேலாண்மையை விவரி.

69. தமிழ்நாட்டின் நன்னீர் உணவு மீன்களைப் பற்றி எழுதுக.

70. மீன் வளர்ப்பு குளத்திற்கான பௌதீக, வேதியியல் மற்றும் உயிரியல் காரணிகளை விவரி.



StudentBounty.com

www.StudentBounty.com
Homework Help & Pastpapers